**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 20 of 2023**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : இளவரசன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.27.10.2025**

**முதல் விசாரணை**

நான் இலால்குடி, சிறுதையூரில் வசித்து வந்து டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் வசித்து வந்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 23.04.2022ம் தேதி நானும், நடராஜன் என்பவரும் சொந்த வேலையாக திருச்சி செல்வதற்காக இலால்குடி சந்தைப்பேட்டையில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே காலை 11 மணியளவில் சென்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும்

பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், நடராஜன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.10.27 11:25:58 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 20 of 2023**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: அன்பழகன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1Present. A2 absent. Petition filed u/s. 317 Crpc and allowed)**

**Dated.27.10.2025**

**முதல் விசாரணை**

நான் பம்பரம்சுற்றியில் வசித்து வந்து டீக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்துகளை நான் எங்கு வைத்து, எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3/அ.சா.4** ஆகும். கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது கையெழுத்துகள் முறையே **அ.சா.ஆ.4/அ.சா.4, அ.சா.ஆ.5/அ.சா.4** ஆகும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 20.12.2022ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், சசிக்குமார் என்பவரும் மாந்துறை பஸ் ஸ்டாப் அருகில் சென்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. பின்பு எதிரிகளை போலீசார் கைது செய்தபோது, அந்தோணிராஜ் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலீசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் நானும், சசிக்குமார் என்பவரும் 11.45 மணியளவில் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் எதிரி ஓட்டி வந்த நம்பர் பிளேட், இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிந்த TVS XL Super Heavy Duty என்ற இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 13.00 மணிக்கு எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், சசிக்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரியையும், எங்களையும் அழைத்து சென்ற எதிரியின் வீட்டின் அருகே அவர் மறைத்து வைத்து எடுத்து ஆஜர் செய்த நம்பர் பிளேட், இன்ஜின் நம்பர், சேஸ் நம்பர் அழிந்த TVS XL Super Heavy Duty ஒன்றினையும், Hero Honda Splender plus ஒன்றினையும், TVS XL Super ஒன்றினையும் போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 14.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து

காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.10.27 11:26:06 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி